அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல: 17/98 எனது இல: ஆ/111/3/17-1

அரசாங்க, நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.
சுதந்திர சதுக்கம்
கொழும்பு-07
1998-05 - 06

ஆந் திகதி
எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
திணைக்களத் தலைவர்களுக்கும்.

## சொத்துக் கடன்களுக்கான பிணையாளிகள் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்திற்கான திருத்தங்கள்

தாபன விதிக்கோவையின் XXIVஆம் அத்தியாயத்தின் 11.8 ஆம் பிரிவு மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான அக்ரஹார காப்புறுதித் திட்டத்திற்கு ஏற்புடையதாக வெளியிடப்பட்ட 1997.01.31 ஆந் தேதிய 5/97 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றிக்கையின் பால் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. மேற்படி சுற்றறிக்கையின் 2(11)ஆம் பந்தியின் குறிப்பிட்டுள்ளவாறு தனது விருப்பப்படி கடன் பாதுகாப்பு காப்புறுதியில் சேர்ந்துள்ள உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கையின் 3ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள 3 ஆம் பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ள நலன்கள் கிடைப்பதால் அவ் ஏற்பாடுகளை உள்ளடக்கி கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு 11:8:1 என்ற வகையிலான உட்பிரிவொன்று தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தில் உள்ளடக்கி தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் திருத்தப்படுகின்றது.

11:8:1 அக்றஹார காப்புறுதித் திட்டத்தின் கடன் பாதுகாப்பு காப்புறுதித் திட்டத்திற்கு உதவித் தொகை செலுத்தும் ஒரு உத்தியோகத்தர் தொடர்பிலானவிடத்து 11:8 இல் குறிப்பிட்டுள்ளவாறு பிணையாளிகளை முன்னளிப்பதற்குப் பதிலான, மாற்றீடாக 5/97 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி அந்தக் காப்புறுதிச் சான்றிதழ் பிணையாக சமர்ப்பிக்க முடியும்.

02. இவ்வேற்பாடுகள் 1997.01.31 திகதி தொடக்கம் நடைமுறைப்படும்.

ஒப்பம்/டிக்ஸன் நிலவீர
பதில் கடமை புரியும் செயலாளர்
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

sot/w/2